முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 157/2022

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்தாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராமன் | கிராமம் | : பலவஞ்சிபாளையம் |
| வயது | : 80 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 03-09-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா பிராது. முதல் விசாரணை வாக்குமூல விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருகில் உள்ள நபர்கள் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் கண்ட 1/327 என்னுடைய முகவரி தான். 1/326 முகவரி தங்கமணி உடையது என்றால் சரிதான். நான் குடியிருப்பது வேறு முகவரி என்றால்சரிதான். தாவா சொத்துக்கு 14.10.1993 ல் பட்டா பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் 30 ஆண்டுகளாக குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவாவில் 60 ஆண்டுகளாக குடியிருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

2) 2 ம் பிரதிவாதி செல்வி என் மாமியாரின் மகள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான், அவர்கள் அவர்களுடைய பட்டா இடத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் என் பட்டா பூமியில் தான் குடியிருக்கிறார்கள். தாவா பிராதிலும், முதல் விசாரணையிலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா இடத்தில் இருக்கிறார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3) என் கணவர் பெயர் ராமன். 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் முத்தான். அவர் என் கணவருடன் உடன் பிறந்தவர். என் கணவர் தான் மூத்த மகன். முத்தான் இறப்பதற்கு முன்பே என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் இறப்பிற்கு பின்னிட்டு முத்தான் பராமரிப்பில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்பு செவந்தாம்பாளையத்தில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். அந்த முகவரியில் 30ஆண்டுகளுக்கு முன்பு இருந்தேன். 2 மற்றும் 3ம் வாதிகள் என் மகள்கள். அவர்களுக்கு திருமணமாகி வேறு இடத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. தாவாவிற்காக என் மகள்கள் இங்கு இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 5ல் இதில் மீதமுள்ள பகுதியில் 4, 5 பிரதிவாதிகள் வீடு கட்ட முயன்றபோது அதனை நானும் 2, 3 வாதிகளும் தடுக்க முற்பட்டோம் என்று சொல்லி உள்ளேன் எந்த தேதியில் வீடு கட்டினார்கள், மீதமுள்ள பகுதி என்றால் எந்த பகுதி என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் 2019ம் ஆண்டு வீடு கட்டினார்கள் என்றால் சரிதான். அவர்கள் கட்டிடம் கட்டியது எனக்கு தெரியும். கட்டிடம் கட்டுவதற்கு முன்பு அங்கு ஓட்டுவீடு தான் இருந்தது என்றால் சரிதான்.

5) 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் ஓட்டுவீட்டில் இருந்தனர் சரியல்ல. நான் மட்டும் தான் அதில் இருந்தேன். 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் வீடு கட்ட பாலக்கால் போடும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் என் மகள் வீட்டில் இருந்தேன். 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் வீடு கட்டுவது தெரிந்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை என் கணவர் இறந்த பின்னிட்டு முத்தான் என்பவருடன் வாய்மொழியாக ஒப்பந்தம் செய்து தற்போது 1ம் வாதி 1/327 என்ற முகவரியில் குடியிருந்து வரும் இடத்திற்கு பட்டா வாங்கிக் கொடுக்க ரூ.40 ஆயிரம் பெற்றுக் கொண்டேன் என்றால்சரியல்ல. தற்போது அவர்கள் வீடு கட்டி முடித்த பின்னிட்டு தற்போது அந்த தொகையை அபகரிக்கும் எண்ணத்தில் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) நான் குடியிருக்கும் வீட்டுக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அந்த மின் இணைப்பு மேல்புறம் உள்ள வீட்டில் இருந்து எடுக்கப்பட்டது. அந்த மின் இணைப்பு 5ம் பிரதிவாதி தங்கமணி செலவு செய்து பெற்றார் என்றால் சரியல்ல. முதல் விசாரணை பத்தி 7ல் எனது வீடும் பிரதிவாதிகளின் வீட்டின் வீட்டில் முன்வாசலினை சேர்ந்த மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி உள்ள வழித்தடமாக கொண்டு பல வருடங்களுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக எனக்கும் மற்ற வாதிகளும் பிரதிவாதிகளும் பயன்படுத்தி வருகிறோம் என்று சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான். அந்த தடத்தை நான் தடுத்து பிரதிவாதிகளுடன் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல.

7) 2ம் வாதி என் மகளின் கணவர் கட்டிட வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவர் தங்கமணிக்கு வீடு கட்ட ஒப்பந்தம் போட்டார் என்றாலும் தங்கமணி வீட்டு வேலையை அவருக்கு கொடுக்காததால் அவர் சொன்னதின் பேரில் பல லட்சம் செய்து கட்டிய கட்டிடத்தை அபகரிக்க வேண்டி இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA Digitally signed by VANITHA Date: 2025.09.03 17:15:41 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.